திரு முழுக்கு

Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

+94763223960

2-5-2025

திருமுழுக்கு-நீரும் நெருப்பும்

நிர்க்குண பிரம்மம்

When there is darkness, there is no day or night,
*no being or non being. Only Siva-*Revelation 218
All this existed reduced to darkness, unperceived, undefined;
Shiva literally means "that which is not"

*Then God said "Let there be light"–*Gen :1-3
*You are the light of the world- Jesus-*Mat 5-14



" நம் உருவிலும், நம் சாயலிலும் மானுடரை
நாம் உண்டாக்குவோம்" தம் உருவிலே
கடவுள் ஆணும் பெண்ணுமாக
மனிதர்களைப் படைத்தார்-Gen 1:26-27

எரிந்தும் எரியாத முட்செடியில்,
சடமும், சக்தியும், தன்னுணர்வுமாய்
புரிதல் கடந்த இருப்பின் தரிசனம்

இருப்பவர் நாமே எம் நாமம்
இயம்பிதை ஆய்ந்த மோஸே
மனதிலே ஆனந்தக் கரிசனம்
I am who I am -(Exodus-3: 2, 14)

இருப்போ இறையன்றி வேறில்லை,
அறம், பொருள், இன்பம் அறிந்து
கடந்து, வீடு தேடும் மனிதன்
இறைவனேயன்றி வேறு யாருமில்லை

இருமையின், இரு பால்களின்
(Transcended & Phenomenal)
சிவ-சக்தி வடிவான
முதன்மைச் சக்திகளின் இணைப்பாய்
அர்த்நாரிஸ்வர வடிவாய் (Androgynous figure)
ஆதிபகவானாய், கடலும், அலையுமாய்
ஒன்றில் ஒன்றான பிரபஞ்ச இருப்பு
(cosmic consciousness)

தூய உள்ளுணர்வாய், நிர்க்குண பிரம்மமாய்
செயலுக்கு அப்பாற்பட்ட இருப்பாய் (absolute reality)
தியான மனமாய் ஆற்றலாய், ஆன்மாவாய்,
நிலைச் சக்தியாய்(Static) ஆண்மையாய்,
தந்தையாய் சிவம் சிவத்தின் வெளிப்பாடே சக்தி
(The masculine- feminine polarity-Tantrism)

குண்டலினி யோகம்

சக்தியைச் சடமாக மாற்றும்
அன்னையாய், பெண்மையாய்-
தியானத்தின் இயக்க சக்தியாய்
தூய ஆவியாய்-சக்தி (kinetic)

சக்தியோ சிவத்தின் தொடர்ந்த தொடர்ச்சி
அருவ, உருவ அடையாளமாய்ச் சிவசக்தி
தாய் வழியே உருவற்றது உருப்பெறுவதே
படைப்பான அற்புத நிகழ்ச்சி

சக்திக்கு அப்பால், சடம் கடந்த
சூனியமாய்ச் சிவம் சிவமே சக்திக்குத்
தந்தை-சக்தியே சிவத்திற்குத் தாய்

விளங்கமுடியாத பேருண்மை
ஒன்றில்லாமல் ஒன்றில்லை
சிவனின்றிச் சக்தியில்லை-
சக்தியின்றிச் சிவமில்லை

தியானிக்கும் தூய மனமாய்ச் சிவம்,
தியானத்திற்கான ஆற்றலாய்ச் சக்தி,
தியானத்தின் உயர் நிலையே சமாதி
சிவ சக்தி ஒன்றிணைதலே உயர் யோகம்

மனிதனோ பிரபஞ்சத்தின் கூறு
மூலாதாரம்,சுவாதிஷ்டானம், மணிப்பூரகம்
அனாஹதம், விசுத்தி, ஆக்ஞா, சகஸ்ரஹாரம் என
அடியிலிருந்து முடிவரைக்கும் சக்கரங்கள் ஏழு

சகஸ்ரஹாரம் அல்லது துரியமோ
சிவ அம்சம், மூலாதாரத்தில்,
முதுகெலும்பின் அடியில் சுருண்ட நாகினியாய்
சர்பவடிவில் சக்தி அம்சமாய் குண்டலினி

குண்டலினி எழுந்து உயர்ந்து
சுழுமுனை வழியே ஆறு சக்கரங்களைத்
தூண்டிக் கடந்து சஹஸ்ரஹாரத்தில்
சிவத்தோடு ஒன்றாவதோ சிவசக்தி

மனிதன் இறைவனை அனுபூதியில் உணர்ந்திட,
ஆன்மா, இறைவனோடு ஒன்றினையத் தோன்றும்
பேரின்பமே குண்டலினி யோகம்

அறிபவன், அறிதல் வேறுபாடு மறையாமல்
இரண்டற்ற பிரம்மத்தின் தன்மையை அடைய
அறிதலாய்த் தோன்றுவதே ஞானம்
அதுவே சவிகல்ப சமாதி நிலை

நிலை வாழ்வு

அறிவுக்கு காலம் தேவை
அறிதல் நிகழ்வது கணப்பொழுதே
அதுவே ஞானம்

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை இராகம்
ஏழு சக்கரங்களுக்குள் எத்தனை பாவம்
ஏழ் பிறப்பெடுத்து மனிதன் ஞானியாகும்
பரிணாமம் குண்டலினி யோகம்

விண்ணினின்று மண்வந்து, உலகு உய்வுற-
மானுட வடிவெடுத்த வார்த்தை
வழியும், உண்மையும், வாழ்வும் நானே
வாழ்வால் சொன்னதோ மீட்பின் கீதை

ஐம்புலனறிவாய் அலைக்கழிக்கும்
அறிவாய் ஆணவமாய் குரங்காய்
இன்பவனத்தை இழந்த
அலைபாயும் மனமோ ஆதாம் மனம்

என் சித்தமன்று உம் சித்தம் என்றே
பரிபூரண சரணாகதியில்
ஆணவத்தை ஆகுதியாக்கும்
இயேசு மனம்

இயேசு, கிறிஸ்துவாகி வீடு திரும்பும்-
வட்டப் பயணமே நிலை வாழ்வு

உள்ளுணர்வின் சிகரத்தில்
பெருமுத்தாய், ஏழாம் சக்கரத்தில்
சிவ சக்தியாய் இன்புறும்
கிறிஸ்து உள்ளுணர்வு

உள்ளுணர்வின் சிகரத்தில் கிறிஸ்து நிலை
அதலபாதாளத்தில் விலங்கு நிலை
இரண்டிற்குமிடையே ஊசலாடும்
ஆதாமோ ஆணவ மனித நிலை

உயர்ந்தால் இறைவன்
தாழ்ந்தால் மிருகம்
உள்ளுணர்வில் உயர்வதே
விடுதலை

திருமுழுக்கு யோவான்

மானிடரே மனம் மாறுங்கள்,
விண்ணரசு நெருங்கி விட்டது
திருமுழுக்கே முதல் தீட்சையாக
தபசி யோவானின் தவமான அழைப்பு

நீராலும், நெருப்பாலும் குருவின் தீட்சை,
நீரும், நெருப்பும் முரண்பாடு
ஒன்றையொன்று நிறைவு செய்யும் அழகோ
இயற்கையின் நிலைப்பாடு

கீழ் நோக்கிப் பாயும் நீர்
மேல் நோக்கி எழும் நெருப்பு
நீரால் நெருப்பணையும்-நெருப்பால்
நீரோ ஆவியாகும்

நெருப்பில் படைப்பதெல்லாம்-
நெருப்பாகப் பஸ்பமாக்கி-பின்
தானாய் அணையும் நெருப்பு

நீரோ சவிகல்ப சமாதி
நெருப்புபோ நிர்விகல்ப சமாதி
உருவகமாய் இரு நிலைகள்.

நீரும், நெருப்புமான கலவை மனிதன்,
உடலின் பெரும் பகுதி நீராக,
உயிர்ச்சுவாசம் நெருப்பாக-
உடல் குளிர்ந்தாலும் மரணம்,
கொதித்தாலும் மரணம்
இரண்டின் சமநிலையில் அவன் இருப்பு

உள் மூச்சால் பிறந்து வெளி மூச்சால்
இறந்து ஒரு கணம் பிறந்து
மறு கணம் மடிந்து கணந்தோறும்
ஊசலாட்டமாய் மனித வாழ்வு

பிறப்பு, இறப்பு எனும்
இரு கரைகளுக்குமிடையில் ஓடும்
நதியாய் மனிதப் பயணம்

கொண்டு வந்ததும் ஏதுமில்லை,
கொண்டு போவதும் ஏதுமில்லை
வாழ்வு ஒரு அழகிய கனவே

ஆன்மா அழிவதில்ல
ஆணவ மனமே அழிகின்றது,
வாழ்வின் ஆழங்களைச் சுவைத்தவன்
வீடு செல்லும் வழியை அறிகின்றான்

யோவானின் கட்டியம்

நீரால் என் திருமுழுக்கு என்னிலும்
வல்லவர் அருளும் திருமுழுக்கோ
தூய ஆவி எனும் நெருப்பு

அண்ணலின் மிதியடி வாரை அவிழ்க்க
அடியவன் அருகதையற்றவன்,
அவர் வளரவும் நான் குறுகவும்
எம் அழைப்பு

தம் சுளகால் கோதுமையையும்,
பதரையும் பிரிப்பார் கோதுமை
களஞ்சியத்தில் அக்களிக்க பதர்களோ
அணையாத நெருப்பில் புலம்பும்

அடி மரத்திலோ கோடரி -நற்கனி
கொடாத மரங்களுக்கோ அபாய அறிகுறி,
நெருப்பாய், சமத்துவ சமுதாயப் புரட்சியாய்
இறைவாக்கினராய், நீதியின் வடிவாய் யோவான்

இறை மகன் பாதையைத் தயார் செய்து-
மனுமகன் வருகையை முழங்கிய கட்டியக்காரன்
இதோ கடவுளின் செம்மறி தம் சீடர்களுக்கு
மெய்வழி காட்டிய வழிகாட்டி

திருமுழுக்கு –ஞானம் பெறுதல்



முப்பதாண்டு அஞ்ஞாத வாசத்தை-தவமாய்
யாத்த தபசி, பாலையில் ஒலித்த குரல்
பரவச அழைப்பாக, அகப்பயணம் வேள்வியாக
தம்மை ஆகுதியாக்கிய இயேசு

விழிப்புணர்வு நிலையின் ஏற்றத் தாழ்வில்
தம்மை அறிந்தவர் மொழிந்தார்-நானோ
உம்மிடம் திருமுழுக்கு பெறவேண்டியவன்
என்னிடம் நீர் வருவதென்ன?

தன்னை அறிதலே மெய்ஞானம்
தன்னை அறிந்தவன் தந்தையை அறிகிறான்
வாழ்வு தேடலாக-ஆணவம் கழித்த யோகி
பூரண சரணாகதியில் வீட்டை அடையும் ஞானி

யோவானை மனம் மாற்றி ஆன்மீகப்
பாரம்பரியத்தை நிலை நிறுத்தி
சீடன் வழியாய் குரு பெற்ற திருமுழுக்கு

குருவின் பாதையைத் தயார் செய்ய,
யோவானின் அழைப்பு தவமானது,
திருமுழுக்கு வழியாய்-இயேசுவை அறிதல்
அண்ணலுக்கு வரமானது

தவத்தால், தியானத்தால், செபத்தால்
தன்னைத் தயாராக்கும் சீடனின் இருப்பு
இறை வேட்கையால் உள்ளம் தவித்திட
உள்ளமும், உடலும் குளிர நீருள் மூழ்கிட,
குருவின் சக்தி பாய்ந்திட
ஆணவ மனம் கழிந்திட நிகழும் இறப்பு

எழும்போது குரு அளிக்கும், நீராலும்.
தூய ஆவியாலும் நிகழும்,
இரண்டாம் பிறப்பு-உள்ளுணாவின் விழிப்பு
ஞானத்தில் நிலைப்பு

இருமை கழிந்து தூய மனம் மலர்ந்திட,
புறா வடிவில் சக்தி அவர் மேல் இறங்கிட ,
தூண்டப்பெற்ற குண்டலினி

சுழுமுனை வழியே ஆறு சக்கரங்களைத்
தூண்டி மேல் எழுந்து சிவ இருக்கையான
சஹஸ்ரஹாரத்தில், சிவ, சக்தி சங்கமிக்க
மலர்ந்த குண்டலினி யோகம்



சிவசக்தியின் ஆனந்த இணைதலில்
தந்தை உள்ளுணர்வு பூரிக்க,ஞானமயமாய்
இறை மகனாய் அவர் திருநிலை
இயேசுவின் இரண்டாம் பிறப்பானது

இதோ என் பிரிய மகன்,
இவர் மீது பிரியமாயிருக்கிறேன்
நீர் என் மைந்தர்-இன்று நாம்
உம்மைப் பெற்றெடுத்தோம்

முழு இருத்தலும் பூத்து மகிழ்ந்து
சிவத்தின் குரல் வாழ்த்திக் களித்திட
தூய மனம் விழித்திட
தன்னை அறிந்த மெய்ஞானம்

பெண்மையாய்த் தூய ஆவி, உண்மையாய்,
சக்தியாய் தாயாய் அது, ஆணாய்த்
தந்தையாய் சிவம், அரு, உரு,அறிவு
கடந்த மெய்பொருளாய்-இறைவன்

இறைவன் அரியணை அமர்ந்திட,
அறிவு கடந்த, அறிதலின் மலர்ச்சி
இயேசு ஞானம் பெற திருமுழுக்கோ
அற்புத நிகழ்ச்சி

உள்ளுணர்வின்-அதி உன்னத மலர்வான
சவிகல்ப சமாதி, மனமழிந்து சூனியமாய்
இறையுணர்வாய், சமம் சக ஆதி யாய் மாறும்
உன்னத நிலையே சமாதி

அறிபவன், அறிவு எனும் வேறுபாடுகள்
மறையாமல் பிரம்மத்தோடு
ஒன்றிக்கும் நிலை சவிகல்ப சமாதி

தெய்வீக உணர்வு நிலை சஹஸ்ரஹாரத்தில் இருந்து-
இதயத்தின் இருக்கையான ஆன்மாவின்
இருப்பிடமான, அனாஹத சக்கரத்திற்கு இறங்கிட
அறிவு கடந்த அறிதல் மலர்ந்திட
ஞானமாய், கருணையாய் அவர் இருப்பு

இயம்புவதெல்லாம் இறை வார்த்தையாய்
வெற்றுப் புல்லாங்குழலில்-
இறை கானமாய் அவர் நிலைப்பு

விழிப்புணர்வு பெற்றவர் இதயத்தால் வாழ்ந்திட
சொல், செயால், சிந்தனை எல்லாம்
அன்பு மயமாகி-கருணை பொங்கிட
அழிவற்ற ஆன்மா நான் எனும் உணர்வு
தெய்வீக உள்ளுணர்வோடு இணைகின்றது
(Ego Transcends super Ego)

மனமழிய, இருமை கழிந்திட,
நானும், தந்தையும் ஒன்றென்ற
அக்களிப்பு அஹம் பிரம்ம அஸ்மி

மனித உள்ளுணர்வில் நிகழும் அற்புதமாய்
இருமையின் இசையாய், இசைவாய்,
மனுமகன், இறை மகன் சமநிலையின் உருவகமாய்
அன்பு, பகை மறைந்திட தோன்றும்
இருமை கடந்த சுத்த சைதன்யமாய் இயேசு

அமைதியின், சமாதானத்தின், தூய்மையின்
இசைவாய் புறா உருவமாய்ச் சக்தி-
தூய பிரபஞ்ச உணர்வாய்ச் சிவசத்தி

பிரபஞ்ச உணர்வு எனும் நாணயத்தின்
இரு பக்கங்பங்களாய்ச்-சிவமும், சக்தியும்
ஆணும். பெண்ணும் தம்முள் ஒன்றாக
அர்தநாரிஸ்வரரான அழகு நிலை

போதனை

தன்னை அறிந்த தூய மனம்
ஆனந்தக் கூத்தாடியது.
யான் பெற்ற இன்பம் பெறுக வையாகம்
என்றே தெருவெங்கும் முழங்கியது

கட உள்ளே கடவுளாவாய், மனம்
மாறுதலின் சாரமாக மனம் மாறுங்கள்-
விண்ணரசு நெருங்கிவிட்டது
இயேசுவின் நற்செய்தியானது

நான் உங்களுக்குச் சொல்கிறேன்
ஆபிரகாமிற்கு முன் நான் இருக்கிறேன்
அறிதலால் மலர்ந்த உண்மை
அதிகாரத்தோடு முழங்கியதோ மேன்மை

மானுடத்தை ஈர்க்கும் தெய்வீகக்
காந்தப்புலமாய் இறை இருப்பின்
சாட்சியமாய் சத் சங்கமாய்
அவர் இருப்பு

செங்கமலத்தை சூழும் மதுகாரிகளாய்
ஏழை, எளியோர் பாவிகள் கூடிக் களிக்க
திருச்சட்டம் கடந்த அன்புப் புரட்சி
பாரம்பரிய மதவாதிகளுக்குச் சவாலான புரட்சி

ஆணவ மனமழிந்து பெருவாழ்வு வாழ
புதுப்பிறப்பிற்கான-இறப்பே திருமுழுக்கு
மரணமே குரு- குருவே மரணம்
தன்னை இழப்பவனுக்கே நிலை வாழ்வு

அன்பு மன்னிப்பு இறை இரக்கத்தின்
அமைதியின் தூதராய் -உண்மையும்,
அருளுமான அன்புப் புரட்சியாய்-
ஆன்மீக அகக் கிளர்ச்சியின் புதுவடிவமாய்,
புதிய அகத்தேடலின் முதல் குருவாய்
உள்ளுணர்வின் சிகரமாய் இயேசு

மனித உள்ளங்களில் இறையுணர்வு விழித்திட
விழிப்புணர்விற்கான உள்ளுணர்வை எழுப்புதல்
அகத்தீயை மூட்டுதல் அன்னாரின்
வாழ்வும் போதனையுமான அகக்கிளர்ச்சியானது

இறைவன் நம் தந்தை, நான் உங்கள் சகோதரன்
யோவானின் எதிர்பார்ப்பை கடந்த கருணாகரன்
தீர்ப்பும், தண்டனையும் கடந்த தயாளன்
அகத்தீ மூட்டும் அகக்கிளாசியாளராய் மனுமகன்

எளிய மனத்தவருக்கே விண்ணரசு
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்-
இரக்கமுடையவருக்கு இரக்கம்
பகைவனுக்கு அன்பு, பலியை அல்ல
இரக்கமே இறை விரும்புவது



தட்டுங்கள் திறக்கப்படும்-
குண்டலினி சக்தியைத் தூண்டும்
கேச்சார முத்ராவைக் குறிக்க-
(திருமந்திரம் -808)

கேளுங்கள் கொடுக்கப்படும்-
பக்தி யோகமாகமானது
தேடுங்கள் கண்டடைவீர்-
கர்ம யோகமானது

மண்ணுலகில் தீயை மூட்டுவதே என் யாகம்
அது இப்பொழுதே பற்றி எரிய
வேண்டுமென்பதே என் தாகம்

குண்டலினியோகத்தை தூண்டி
அகத்தீ மூட்டி, ஆணவத்தை
ஆகுதியாக்கும் அகயாகம்
தூய மனமே நம் யோகம்

அகத்தீயை மூட்டி, ஆணவத்தை
ஆகுதியாக்கி ஆன்மாவாய்
ஒளிர்ந்த ஞான யோகி இயேசு கிறிஸ்து

உலகின் ஒளி நீங்கள்-உங்கள்
ஒளி ஒளிர அக அக்கினி எரியட்டும்
ஆணவம் வெந்து சாம்பலாகட்டும்

அக்கினியோ ஜீவ சக்தி-
விழிப்புணர்வு மலரத் தோன்றும்
குண்டலினி யோகமோ
வாழ்வின் ஒளி

யான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற
மறைப்பொருள்
சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற
உணர்வுறு

மந்திரந்தான் பற்றத்
தலைப்படுந் தானே-
திருமூலர் திருமந்திரம்-
85

அக்கினிலிங்கம், கயிலாய ஜோதி
நம்முள்ளே- குண்டலினி மலர நாம்
அதுவாகும் பேரின்பம்

உலகின் உப்பு நீங்கள் உலகை
வளமாக்குங்கள் -உலகின்
ஒளி நீங்கள்-உங்களுக்கு
நீங்களே ஒளியாகிப்போங்கள்

மண்ணுலகில் அமைதியை
உண்ணடாக்க அல்ல, மாறாகப்
பிளவை உண்டாக்கவே வந்தேன்-

மனமோ இருமையின் இருப்பிடம்
நன்மை, தீமை, இருள் ஒளி.
ஆண் பெண் எனப் பிளவுபட்ட
சார்புநிலை சார்ந்த உலகம்

ஐம்புலன்களும் அறிவும் சேர்ந்த
ஒரு குடும்பம்
மனதால் பிளவுண்ட அவலம்

மனம் அழிந்தால் இருமை அழியும்,
இருமை கடந்து நிலை
உண்மையைத் தவமாக்க அழைப்பு

மனம் மறைந்தால் தோன்றும் அமைதி
மனமழிந்திட யோகமே வழி
மனமழித்து யோகத்தில் நிலைத்து-
மாயைக் கடந்து ஒருமையில் நிலைத்திட
சின்மயனின் மகத்தான அழைப்பு-

பற்றறுத்த யோகியாய்
பரவெளியின் பேரொளியாய்
ஞானத்தின் வடிவாய் இயேசு

வானுறைவோன் வந்தே என் நெஞ்சில் தானுறைய-
தேனுறை மலராய் நெஞ்சம்தான் தித்திக்க
யானும் அவனாகி-நானும் தந்தையும்
ஒன்றென்ற பேரின்பப் பெருநிலையில்
யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
என்றே மனம் மாறுங்கள் விண்ணரசு நெருங்கிவிட்டது
எங்கும் ஒலித்த இயேசுவின் நற்செய்தி முழக்கம்

நெருப்பு

காற்றில் நாணல் ஆட, கலிங்கப் பட்டு
அணிந்தோர் மாளிகையில் வாழ,
யோவான் சிறையில் வாட நற்செய்தி முழங்கி,
நலமளிக்கும் நாடோடிப் போதகராய் இயேசு

நீரால் பெற்ற திருமுழுக்கில்
கிட்டியதோ நிர்வாணம் நெருப்பால்
பெறும் திருமுழுக்கில் பரி நிர்வாணம்

இரத்தமும், சதையுமான மானுடத்துள்
சிறையுண்ட ஒளிரும் ஒளி மேகத்தின்
(Luminous cloud of light)
தெய்வீகத்தின் விடுதலையாய்-
பரி நிர்வாணமாய், வசை, கசை,
வானுயர்ந்த கல்வாரிச் சிலுவை வழியாய்
அவர் பெற்ற நெருப்பாலான திருமுழுக்கு
நிர்விகல்ப சமாதியாய் இயேசுவின்
உடல் உதிர்ப்பு

குண்டலினி எழுந்து, ஆயிரம்
இதழ் சஹஸ்ரஹகாரத்தில் சிவத்தோடு
சங்கமிக்க- ஆயிரம் இதழ் விரித்து
அழகிய தாமரை மலர
சக்தி சிவத்தோடு-ஒன்றானது

மரணத்தில் உடல் கழிய
இருப்போடு ஒன்றித்த மலர்தல்
உயிர்ப்பானது-இயேசு கிறிஸ்துவான
தேவ அபிஷேகம் நடந்தேறியது

வந்த விடமும், போனவிடமும்
மறைந்து சூனியத்தில் ஒன்றாக-இயேசு
கிறிஸ்துவாய் மலர்ந்த தெய்வீக நிலை

என் தந்தையே என் தந்தையே
ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்
இரு முறை தவித்தே ஒலித்த மனுமகன்
குரலிலோ ஆதங்கம்
மௌனத்தில் இலயித்திருந்த
இருப்பாய் பிரபஞ்சம்

மனம், வார்த்தை கடந்த இறப்பின்
வழியான உயிர்ப்போ பதிலானது-
இயேசு கிறிஸ்துவான அகமலர்தல்
சிலுவையில் நடந்தேறியது

விழிப்புணர்வோடு பூரண சரணாகதியில்
இறப்பவரே உயிர்க்கின்றார்
உன்னுள் வாழும் மெய்யிருப்பிற்கு இறப்பேது?

நானே நீ-அஹம் பிரம்ம அஸ்மி
எப்படி நான் உன்னைக் கைவிட முடியும்
உன் மெய்யிருப்பு நானே

உடலிற்கே இறப்பு, அது நீயுமன்று,
நானுமன்று,
உள்ளுணர்விற்கு இறப்பேது
இருப்பாயது இருப்பவர் நாமே அது

கடலோடு சங்கமிக்க கணப்பொழுது
அஞ்சிய நதி- மறு கணம்
என் சித்தமன்று நின் சித்தமென்றே-
மௌனத்தில் சரணடைந்து சங்கமித்து
கடலானது எல்லாம் இன்பமயமானது

ஆணவத்தின் இறுதித் துளியும் அழிந்திட
ஆழ்ந்துணர்ந்த புரிதலில் மனமழிந்திட
பூரண சரணாகதியில்-இயேசு, கிறிஸ்துவாக
மலர்ந்து இருப்போடு இருப்பாகி ஒன்றாகிட
இறப்பைத் தொடர்ந்து நடந்த உயிர்ப்பு

ஜீவ துரியத்தில் இறையுணர்வு
மலர்ந்திட தம்மை அறிந்தவர்
இறைவனோடு இருந்தார்

பரா துரியத்தில் தந்தையை அறிந்து
ஐக்கியமாகி, இரண்டாகி நின்றார்
சிவ துரியத்தில் தந்தையோடு ஒன்றானார்,
துரியம் கடந்த நிலையில்
சிவத்தோடு ஒன்றாகி சிவரூபமானார்-

பூரண விழிப்புணர்வில்-மெய் கழித்து
மகன்-தந்தையாகும் நிலை வீட்டை
அடையும் நிலையானது
முழு இருத்தலியலும் ஆனந்தமானது

1.*In Jiva turiya, Jiva realizes its spiritual nature, and is in God consciousness-but duality still exists.*

2. *In Para turiya, Jiva realizes Siva, and is union with HIM, but not united-duality still exists.*

3.*In Siva turiya, Jiva unites in God totally, himself becoming God-the unitive state is reached*

4.*In Beyond turiya, Jiva himself become undifferentiated in God, and attains the subtle Siva state of Luminous Self-Manifestness (Sivarupa)*

திருமூலர் திருமந்திரம் 2826

பிறப்பறுத்தார், உள்ளுணாவின்
உச்சத்தில் இறப்பறுத்தார்,
விழிப்பு, தூக்கம்,
கனவு நிலை அறுத்தார்-

துரியித்தில் இருமை கடந்து
இறையாய் நின்றார்-சச்சித் ஆனந்தம்
ஒளிர ஆகாசவெளியில்
ஆடும் கூத்தனானர்

தந்தையும் தானும் ஒன்றாக,
தந்தையின் வார்த்தையே தவமாக,
உணவாக என் சித்தமன்று நின்
சித்தமென்றே சிந்தையறுத்தவர்
சிவமாகி நின்றார்

விழிப்புணர்வோடு பூரண சரணாகதியில்
தம் ஆவியை கையளித்து இயேசு
கிறிஸ்துவாக மலர்ந்தார்

வாழ்வில் பக்தி யோகம். ஞானயோகம்
கர்ம யோகம், இராஜயோகம்
காட்டிய-மகரிஷியாய் மனுபுத்திரனாய்
அவதார புருஷராய் இயேசு

அயம் ஆத்மா பிரம்மம்,
அஹம் பிரம்ம அஸ்மி-தத் த்வம் அஸி
நாம் அதுவாக இருந்தும்
அதை அறியோம்

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும்,
தன்னலம் துறந்து-தம் சிலுவையை
நாள்தோறும் சுமந்து என்னைப் பின்பற்றட்டும்
என் பொருட்டு தம் உயிரை இழப்பவர்
அதை காத்துக் கொள்கிறார்

ஆணவம் கழித்து தூய மனமாக
நீரால் பெற்ற தீட்சையாய்த் திருமுழுக்கு
அகத் தீ மூட்டி, குண்டலினி எழுந்திட
பரிபூரண சரணாகதியில் அமரனாய் உயிர்ப்பு

மனம் திரும்பி -இயேசுவாய் பிறந்திட-
நீராலான திருமுழுக்கு ஆணவமனம்
அழிந்திடும் அதிசய முழுக்கு

ஞானத்தில் நிலைத்து,
பரிநிர்வாணம் அடைந்திட
நெருப்பால் பெறும் திருமுழுக்கிற்கு
குருவாய் இயேசுவின் அழைப்பு



கிறிஸ்துவாக மலராதவரை தம்முள்
வீட்டை அடையமுடியாது, மீண்டும், மீண்டும்
கருப்பைக் குழியில் விழும் ஊசலாட்டமான
வாழ்வு எரிநரகான துன்பம்

சுத்த சைதன்யமே நம் மெய்யிருப்பு
நம்மை அறிவதே மெய்யறிவு-நம்மிலே
கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
அதுவே நிலை வாழ்வு-இறையரசு

வெண்கலப் பாம்பு-Bronze Serpent

படை கண்டு நடுங்கும் பாம்போ?,
விடை காண முடியாத ஞான வடிவோ?
மடையாய் பெருகும் ஆரோக்கியத்தின் உருவோ
நீண்ட ஆயுளின் வடிவோ?
வாழ்வு, சாவை ஆளும்-வல்லமையோ
வழிபட சர்ப்பம் தெய்வமானது (Nehushtan)

வெண்கலப் பாம்பு உயர்ந்திட,
விண்ணோக்கி உயர்ந்த விழிகள்
இறைவனை இரந்து மன்றாடிட நோய் நீங்கி
குணமான இஸ்ராயேல் மக்கள்

சர்ப்ப வடிவான குண்டலினி எழுந்து
சஹஸ்ரஹாரத்தில் சிவத்தோடு இணைந்திட
மலர்ந்த குண்டலினி யோகமாய்
சிலுவையில் இயேசு -கிறிஸ்துவாக மலர்ந்து
பிரபஞ்ச பிரக்ஞ்சையோடு ஒன்றானா நிகழ்வு

ஆன்மீகத்தின் உயர் விழிப்பு நிலை
உயர்தப்பட்ட வெண்கலப் பாம்பிற்கு
உருவகமானது-மனுமகன் இறைமகனாக
சிலுவையில் நடந்தேறிய குண்டலினி யோகம்
நெருப்பாலான திருமுழுக்கானது

மதங்கடந்து மதத்தன்மையில்
நிலைத்து சுயம் கழித்து சூனியமாதல்
நம் சுதந்திரம்- அதுவே ஜீவனமுக்தி

அக்னி யோகத்தால் அனல் பிழம்பாகி,
ஆனந்த மோட்சத்தை அடைவாய் நீ
சத்தியமானது

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-1-5-2025

"தட்டுங்கள், திறக்கப்படும்" என்ற கூற்று – திருமந்திரம் 808 மற்றும் கேச்சரி முத்ரா

திருமந்திரம் 808-ல் **கேச்சரி முத்ரா** பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கேச்சரி முத்ரா என்பது குண்டலினி சக்தியைத் தூண்டும் ஒரு முக்கிய யோக முறையாகும்.

கேச்சரி முத்ரா மற்றும் "தட்டுங்கள், திறக்கப்படும்"
- "தட்டுங்கள்" என்பது ஒரு அடையாளமாக, ஆத்ம உணர்வைத் தூண்டும் முயற்சியைக்குறிக்கும்.
- கேச்சரி முத்ராவில் **நாக்கை மேலே தூக்கி, மூளைப்பகுதியில் உள்ள அமிர்த சுரபி (Bindu) பகுதியில் கொண்டு சேர்ப்பதன் மூலம்** ஆன்மீக திறப்பை ஏற்படுத்தலாம்.
- இதைச் செய்யும் போது, *அஜ்ஞா சக்கரம் (நெற்றிக்கண்), பிரம்மரந்த்ரம் (மூப்பகுதி) மற்றும் சகஸ்ரார சக்கரம் (மூளையின் உச்சி)* ஆகியவை தூண்டப்பட்டு திறக்கும்.
- எனவே, **"தட்டுங்கள், திறக்கப்படும்" என்றதன் பொருள் – கேச்சரி முத்ரா அல்லது அந்த வகை யோக செயல்பாடுகள் மூலம் ஆன்மீக வாசல் திறக்கும் என்பது.**

கேச்சரி முத்ரா – குண்டலினி சக்தியுடனான தொடர்பு
- கேச்சரி முத்ரா, **"நாக்கு மேலே திரும்பி பக்கவாட்டில் உள்ள மூளைக்குள் செல்லும்"** ஒரு செயலாகும்.
- இது **அஜ்ஞா சக்கரத்தையும் (நெற்றிக்கண்), பிந்துவையும் (மூளையில் அமிர்தம் கசியும் இடம்) தூண்டும்.**
- இதனால், **குண்டலினி சக்தி நாதி (சுஷும்னா) வழியாக மேலே எழுந்து சகஸ்ரார சக்கரத்துடன் இணைகிறது.**
- இதுவே **"திறப்பது" என்று கூறப்படும் ஆன்மீக எழுச்சி** ஆகும்.

திருமந்திரம் 808 – கேச்சரி முத்ரா அல்லது அஜ்ஞா சக்கரத்தைக் குறிக்கிறதா?
- திருமந்திரம் 808 யோக முறையை விளக்குகிறது, ஆனால் இது மட்டும் **அஜ்ஞா சக்கரத்திற்கே உரியது அல்ல.**
- இது **அஜ்ஞா சக்கரத்தையும், பிரம்மரந்த்ரத்தையும், மேலே சகஸ்ரார சக்கரத்தையும் தூண்டும்.**
- அதனால், *"தட்டுங்கள், திறக்கப்படும்" என்பது கேச்சரி முத்ராவிற்கும், அதன்மூலம் ஏற்படும் ஆன்மீக எழுச்சிக்கும் பொருந்தும்!*

கூடுதல் புரிதலுக்கு:
- *அஜ்ஞா சக்கரம்* – உடல், மனம், ஆன்மாவை ஒருமுகப்படுத்தும் இடம்
- *கேச்சரி முத்ரா* – *நாக்கை மேலே திருப்பி உள்ளே அனுப்புவதன் மூலம் பரம்பொருளுடன் ஒருமையடைய உதவும் யோக முறையாகும்.*
- *குண்டலினி சக்தி* – இது ஒவ்வொரு சக்கரத்திலும் தழுவி மேலே எழும்பும் போது ஆன்மீக ஞானம் விரிகிறது.
சுருக்கமாக:
திருமந்திரம் 808-ல் கூறப்படும் **கேச்சரி முத்ரா குண்டலினியைத் தூண்டும் ஒரு முக்கிய முறையாகும், இது அஜ்ஞா சக்கரத்தையும், மேலே சகஸ்ராரத்தையும் இணைக்கும் வழியாக செயல்படுகிறது.**

Gender of the Holy Spirit

In Christian theology, the gender of the Holy Spirit has been the subject of some debate in recent times.

The grammatical gender of the word for "spirit" is feminine in Hebrew (רוּחַ, rūaḥ),[1] neuter in Greek (πνεῦμα, pneûma) and masculine in Latin (spiritus). The neuter Greek πνεῦμα is used in the Septuagint to translate the Hebrew רוּחַ. The pronouns used to address the Holy Spirit, however, are masculine.

The Holy Spirit was furthermore equated with the (grammatically feminine) Wisdom of God by two early Church fathers, Theophilus of Antioch (d. 180) and by Irenaeus (d. 202/3). However, the majority of theologians have, historically, identified Wisdom with Christ the Logos.

Gregory of Nazianzus in the fourth century wrote that terms like "Father" and "Son" in reference to the persons of the trinity are not to be understood as expressing essences or energies of God but are to be understood as metaphors. The same position is still held in the 1992 Catechism of the Catholic Church.[2]

Grammatical gender

Even in the same language, a difference may arise relating to what word is chosen to describe the Holy Spirit. In Greek the word pneuma is grammatically neuter[3] and so, in that language, the pronoun referring to the Holy Spirit under that name is also grammatically neuter. However, when the Holy Spirit is referred to by the grammatically masculine word Parakletos "counselor", the pronoun is masculine (since the pronoun refers to Parakletos rather than pneuma), as in John 16:7-8.[4]

William D. Mounce argues that in the Gospel of John, when Jesus referred to the Holy Spirit as Comforter (masculine in Greek), the grammatically necessary masculine form of the Greek pronoun autos is used,[5] but when Jesus speaks of the Holy Spirit as Spirit, grammatically neuter in Greek,[6] the masculine form of the demonstrative pronoun ekeinos ("that masculine one") is used.[5] This breaking of the grammatical agreement expected by native language readers is an indication of the author's intention to convey the personhood of the Holy Spirit.[7] Daniel B. Wallace, however, disputes the claim that ekeinos is connected with pneuma in John 14:26 and 16:13-14, asserting instead that it belongs to parakletos. Wallace concludes that "it is difficult to find any text in which πνευμα is grammatically referred to with the masculine gender".[8]

In Hebrew the word for Spirit (רוח) (ruach) is feminine, (which is used in the Hebrew Bible, as is the feminine word "shekhinah" in rabbinic literature, to indicate the presence of God, Arabic: سكينة sakina, a word mentioned six times in the Quran).

In the Syriac language too, the grammatically feminine word rucha means "spirit", and writers in that language, both orthodox and Gnostic, used maternal images when speaking of the Holy Spirit. This imagery is found in the fourth-century theologians Aphrahat and Ephrem the Syrian. It is found in earlier writings of Syriac Christianity such as the Odes of Solomon[9] and in the Gnostic early-third-century Acts of Thomas.[10]

Historian of religion Susan Ashbrook Harvey considers the grammatical gender to have been significant for early Syriac Christianity: "It seems clear that for the Syrians, the cue from grammar—ruah as a feminine noun—was not entirely gratuitous. There was real meaning in calling the Spirit 'She'."[11] In the Catholic Church, the Holy Spirit is referred to in English as "He" in liturgical texts,[12] however the Holy See directs that "the established gender usage of each respective language [is] to be maintained."[13]

Discussion in Mainstream Christianity

Ancient church

For Semitic languages, such as ancient Syriac, the earliest liturgical tradition and established gender usage for referring to the Holy Spirit is feminine.[14]

The Syriac language, which was in common use around AD 300, is derived from Aramaic. In documents produced in Syriac by the early Miaphysite church (which later became the Syriac Orthodox Church) the feminine gender of the word for spirit gave rise to a theology in which the Holy Spirit was considered feminine.[15]

Recent discussions

Some recent authors (1980s to present), while retaining masculine reference to Father and Son, have used feminine language for the Holy Spirit. These authors include Clark H. Pinnock,[16] Thomas N. Finger,[17] Jürgen Moltmann,[18] Yves M.J. Congar,[19] John J. O'Donnell,[20] Donald L. Gelpi,[21] and R.P. Nettlehorst.[22 23 24]

Discovering Biblical Equality maintains that viewing God in masculine terms is merely a way in which we speak of God in figurative language. The author reiterates that God is spirit and that the Bible presents God through personification and anthropomorphism which reflects only a likeness to God.[25]

There are some Christian churches (see below) who teach that the Holy Spirit is feminine based on the fact that both feminine nouns and verbs, as well as feminine analogies, are thought to be used by the Bible to describe the Spirit of God in passages such as Genesis 1:1-2, Genesis 2:7, Deut. 32:11-12, Proverbs 1:20, Matthew 11:19, Luke 3:22, and John 3:5-6. These are based on the grammatical gender of both the nouns and verbs used by the original authors for the Spirit, as well as maternal analogies used by the prophets and Jesus for the Spirit in the original Bible languages.

There are biblical translations where the pronoun used for the Holy Spirit is masculine, in contrast to the gender of the noun used for spirit in Hebrew and Aramaic.[3] In Aramaic also, the language generally considered to have been spoken by Jesus, the word is feminine. However, in Greek the word (pneuma) is neuter.[3] Most English translations of the New Testament refer to the Holy Spirit as masculine in a number of places where the masculine Greek word "Paraclete" occurs, for "Comforter", most clearly in the Gospel of John, chapters 14 to 16.[26] These texts were particularly significant when Christians were debating whether the New Testament teaches that the Holy Spirit is a fully divine hypostasis, as opposed to a created force.

Feminine Gender in Other Christian Groups

Latter-day Saints

In the Church of Jesus Christ of Latter-day Saints gender is seen "as an essential characteristic of eternal identity and purpose".[27] The LDS Church believes that before humans lived on earth, they existed spiritually, with a spirit body with defined gender,[28] and that the Holy Spirit had a similar body, but was to become a member of the three personage Godhead[29] (Godhead consisting of God, or Heavenly Father, Jesus Christ, and the Holy Ghost).

Branch Davidians

Some small Christian groups regard the gender of the Holy Spirit to be female, based on their understanding that the Hebrew word for Spirit, ruach, can be feminine or masculine. Their views derive from skepticism toward Greek primacy for the New Testament. Foremost among these groups, and the most vocal on the subject are the Branch Davidian Seventh-day Adventists.

In 1977, one of their leaders, Lois Roden, began to formally teach that a feminine Holy Spirit is the heavenly pattern of women. In her many studies and talks she cited numerous scholars and researchers from Jewish, Christian, and other sources. They see in the creation of Adam and Eve a literal image and likeness of the invisible Godhead, male and female, who is "clearly seen, being understood by the things that are made".[30]

They take the Oneness of God to mean the "familial" unity which exists between them, which unity is not seen in any other depiction of the Godhead by the various non-Hebrew peoples. Thus, having a Father and Mother in heaven, they see that the Bible shows that those Parents had a Son born unto them before the creation of the world, by Whom all things were created.[31 32 33 34]

Unity Church:-The Unity Church's co-founder Charles Fillmore considered the Holy Spirit a distinctly feminine aspect of God considering it to be "the love of Jehovah" and "love is always feminine".[35]

Messianic Jews:- The B'nai Yashua Synagogues Worldwide,[36] a Messianic group headed by Rabbi Moshe Koniuchowsky, holds to the feminine view of the Holy Spirit.[37 38] Messianic Judaism is considered by most Christians and Jews to be a form of Christianity.

There are also some other independent Messianic groups with similar teachings. Some examples include Joy In the World;[39 40] The Torah and Testimony Revealed;[41] Messianic Judaism - The Torah and the Testimony Revealed;[42] and the Union of Nazarene Jewish Congregations/Synagogues[43] ,[44] who also count as canonical the Gospel of the Hebrews which has the unique feature of referring to the Holy Spirit as Jesus' Mother.[45]

Some scholars associated with mainline denominations, while not necessarily indicative of the denominations themselves, have written works explaining a feminine understanding of the third member of the Godhead.[46]

Moravian Brethren:- There was a well-established place in liturgy, prayer and doctrine for the Holy Spirit as the Mother amongst the Moravian Brethren, exemplified by Count Zinzendorf especially.[47]

Gnosticism:-In the Secret Book of John, an ancient codex from the Nag Hammadi Library used in Christian Gnosticism, the divine female principle Barbelo is referred to as the Holy Spirit.[48]

In art

Main article: The Trinity in art

In Christian iconography, the Holy Spirit is most often represented as a dove. There is also a far less common tradition of depicting the Holy Spirit in human form, usually as male. Thus, Andrei Rublev's The Trinity represents the Trinity as the "three men" who visited Abraham at the oak of Mamre[49] often considered a theophany of the Trinity.[50] In at least one medieval fresco, however, in the St. Jakobus church in Urschalling, Germany, the Holy Spirit is depicted as a female.[51]

==
==============

குண்டலினி யோகம் - அது எப்படி நிகழ்கிறது?

குண்டலினி யோகம் என்பது உள் ஆற்றலை எழுப்பும் ஆன்மீக பயிற்சி முறையாகும். இது மனித உடலில் மறைந்து கிடக்கும் சக்தியை (சக்தி தேவியை) துவக்கி, மேலே எழுப்பி, முழுமையான ஆன்மீக புத்துணர்ச்சியையும், பரமானந்த நிலையையும் அடைய உதவுகிறது.

குண்டலினி சக்தி - என்ன?
குண்டலினி என்பது முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் (மூலாதார சக்கரம்) உறங்கிக் கிடக்கும் ஒரு தெய்வீக சக்தி. இது ஒரு சுருளாக மூடி இருக்கும் பாம்பாக (நாகினி) உள்வைத்திருப்பதாக சித்தர்களும் யோகிகளும் விவரிக்கின்றனர்.

குண்டலினி எழுச்சி எப்படி நிகழ்கிறது?
குண்டலினி சக்தி எழுச்சியடையும் போது, அது முதுகுத் தண்டின் வழியாக (சுஷும்நா நாடி) மேலே எழுந்து, ஏழு சக்ரங்களையும் தாண்டி சஹஸ்ரார சக்ரத்தை அடைகிறது. இந்த எழுச்சி நிகழும்போது, யோகி ஆன்மீக ஒளியையும் பேரானந்தத்தையும் உணருகிறார்.

குண்டலினி எழுவதற்கான முக்கிய வழிகள்:
1. **பிராணாயாமம் (சுவாச கட்டுப்பாடு):**
   - நாசியின் வழியாக சுவாசத்தை கட்டுப்படுத்தி, உடலின் ஆற்றலை இயக்கும் பயிற்சி.
2. **தியானம் (தியான யோகம்):**
   - ஒருமுகத்துடன் தெய்வீகத்திலோ, மந்திரத்திலோ மனதை நிலைப்படுத்துதல்.
3. **மந்திர உச்சரிப்பு:**
   - "ஓம்", "சிவாய நம" போன்ற மந்திரங்களை உச்சரிப்பதன் மூலம் சக்தியை தூண்டலாம்.
4. **மூலபந்தம் மற்றும் யோகாசனங்கள்:**
   - உடலில் உள்ள சக்தி மையங்களை (சக்ரங்களை) இயக்கும் சிறப்பு ஆசனங்கள்.

5. **குரு அருள்:**
   - ஒரு ஆத்தும ஞானியின் திருவாசியால் குண்டலினி சக்தி தன்னியல்பாக எழும்.

குண்டலினி எழும்பும் போது ஏற்படும் மாற்றங்கள்
- உடலில் வெப்பம் ஏற்படும்.
- மனம் அமைதியாகி, ஆனந்த உணர்வு வெளிப்படும்.
- கண்ணுக்குள் ஒளிக்கீற்று தோன்றும்.
- தன்னுள்ளே ஒரு பேராற்றல் ஒளிபொலிவு காணலாம்.

திருமந்திரம் மற்றும் பதஞ்சலி யோகம்
திருமந்திரம் (திருமூலர்) மற்றும் பதஞ்சலி யோக சூத்திரங்கள் குண்டலினி யோகத்திற்கான அடிப்படை வழிமுறைகளை வழங்குகின்றன. ***"உயிருடன் உயிராகி ஒங்கும் சிவம்"*** என்பதே இப்பயிற்சியின் இறுதிப் பயன்.
இது உன்னதமான ஆன்மீக சாதனையாகும், சரியான வழியில் பயிற்சி மேற்கொண்டால், மனஉணர்ச்சி கட்டுப்பாடோடு, மிகுந்த பேரின்பம் தரும்.

**ஏழு சக்ரங்கள் – குண்டலினி யோகத்தில் முக்கியம்

குண்டலினி சக்தி மனிதனுடைய **மூலாதார சக்ரத்தில்** உறங்கிக் கிடக்கிறது. இது **சுஷும்நா நாடி** வழியாக மேலே எழும்பும்போது **ஏழு சக்ரங்களை** தாண்டி **சஹஸ்ரார சக்ரத்தை** அடைகிறது. ஒவ்வொரு சக்ரமும் தனிப்பட்ட ஆற்றல் மையமாக விளங்குகிறது.

1️⃣மூலாதார சக்ரம் (Root Chakra)

